செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 2023 நவம்பர் 21

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2021=100): ஒக்ரோபர் 2023**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2013=100 என்ற சுட்டெண் குறுப்பீட்டுக் காலத்தைக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) 2023 ஜனவரி முதல் 2021=100 என்ற புதிய சுட்டெண் குறிப்பீட்டுக் காலத்துக்கு இற்றைப்படுத்தப்பட்டது. 2023 ஒக்டோபர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 1.0% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2023 செப்டெம்பர் மாதத்தின் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 0.8% ஆக இருந்தது. 2023 ஒக்டோபர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே -2.4% மற்றும் 3.4% ஆக காணப்படுகின்றன. இருப்பினும், மாதாந்த அடிப்படையில் உணவுப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2023 செப்டெம்பர் மாதத்தில் பதிவாகிய -5.2% இலேயே 2023 ஒக்டோபர் மாதத்திலும் மாறாதிருந்தது. உணவல்லாப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமும் 2023 செப்டெம்பர் மாதத்தில் பதிவாகிய 5.9% இல் இருந்து 2023 ஒக்டோபர் மாதத்தில; 6.3%வரை அதிகரித்துள்ளது.

மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில், 2023 செப்டெம்பர் மாதத்தில் பதிவாகிய 203.5 இலிருந்து 2023 ஒக்டோபர் மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021=100) 203.6க்கு அதிகரித்துள்ளது. இது 2023 செப்டெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.1 சுட்டெண் புள்ளிகள் அதிகரிப்பைக் காட்டுவதுடன், செலவுப் பெறுமதி அடிப்படையில், உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களில் முறையே 0.51% மற்றும் 0.55% ஆல் ஏற்பட்ட விலை குறைப்புகள் இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களித்தது.

உணவுப் பொருட்களின் விலை குறைப்புகள் பிரதானமாக புதிய மீன், கோழி இறைச்சி, புதிய பழங்கள், உருளைக்கிழங்கு, பச்சை மிளகாய், காய்கறிகள், தேங்காய் எண்ணெய், பாசிப்பயறு, மிளகாய்த்தூள், தேயிலை தூள்/இலைகள் மற்றும் மைசூர் பருப்பு ஆகியவற்றுக்கான உணவுப் பொருட்களின் விலை குறைப்புகள் பதிவாகின. எவ்வாறாயினும், தேசிக்காய், பெரிய வெங்காயம், அரிசி, தேங்காய், கருவாடு, முட்டை, சீனி, வெள்ளைப் பூண்டு மற்றும் சிவப்பு வெங்காயம் ஆகியவற்றின் விலைகள் அதிகரிப்புகள் பதிவாகின.

முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஆகஸ்ட் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம் 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்' (மின்சார கட்டணம் மற்றும் எல் பீ எரிவாயு), "போக்குவரத்து" (பெட்ரோல் மற்றும் டீசல்), 'கல்வி' (பகுதிநேர வகுப்பு கட்டணங்கள்), 'சுகாதாரம்' (தனியார் மருத்துவ நடைமுறைகளுக்கான கட்டணம்), 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும் பராமரிப்பு'ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எவ்வாறாயினும், 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்' (புத்தகங்கள்) 'உணவகங்களும் ஹோட்டல்களும்', ஆகிய பிரிவுகளில் விலை குறைப்புகள் பதிவாகின. மேலும், 'அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் மதிமயக்க மருந்துகள்', மற்றும் ,'ஆடையும் காலணியும்' ஆகிய பிரிவுகளில் மிகவும் குறைந்த விலை குறைப்புகள் பதிவாகின. அதேநேரம், 'தொடர்பாடல்' பிரிவின் விலைக் குறியீடுகள் இந்த மாதத்தில் மாறாதிருந்தன.

2023 ஒக்டோபர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021=100) அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது 2023 செப்டெம்பர் மாதத்தில் பதிவான 1.7% இல் இருந்து 0.6% இற்கு குறைவடைந்திருந்தது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2021 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| **2022** | ஒக்ரோபர் | 201.6 | 236.5 | 179.1 | 188.0 | -0.1 | 1.1 | | | | |
| | நவம்பர் | 200.3 | 233.2 | 179.1 | 187.8 | -0.6 | -0.1 | | | | |
| | டிசெம்பர் | 200.4 | 232.4 | 179.8 | 188.0 | 0.0 | 0.1 | | | | |
| **2023** | ஜனவரி | 201.8 | 232.8 | 181.8 | 189.8 | 0.7 | 1.0 | 53.2 | 53.6 | 52.9 | 52.0 |
| | பெப்ரவரி | 204.1 | 228.1 | 188.6 | 189.4 | 1.1 | -0.2 | 53.6 | 49.0 | 57.4 | 50.1 |
| | மார்ச்சு | 204.8 | 223.2 | 193.0 | 188.1 | 0.3 | -0.7 | 49.2 | 42.3 | 54.9 | 44.2 |
| | ஏப்ரல் | 202.7 | 223.8 | 189.1 | 188.2 | -1.0 | 0.1 | 33.6 | 27.1 | 39.0 | 31.8 |
| | மே | 203.1 | 226.1 | 188.3 | 187.8 | 0.2 | -0.2 | 22.1 | 15.8 | 27.6 | 21.6 |
| | யூன் | 203.3 | 228.4 | 187.1 | 186.5 | 0.1 | -0.7 | 10.8 | 2.5 | 18.3 | 11.3 |
| | யூலை | 201.9 | 227.5 | 185.3 | 188.0 | -0.7 | 0.8 | 4.6 | -2.5 | 10.9 | 6.3 |
| | ஆகஸ்ட் | 201.9 | 224.6 | 187.3 | 188.7 | 0.0 | 0.4 | 2.1 | -5.4 | 9.0 | 4.1 |
| | செப்ரெம்பர் | 203.5 | 226.7 | 188.5 | 189.0 | 0.8 | 0.2 | 0.8 | -5.2 | 5.9 | 1.7 |
| | ஒக்ரோபர் | 203.6 | 224.1 | 190.4 | 189.2 | 0.0 | 0.1 | 1.0 | -5.2 | 6.3 | 0.6 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்